| | | |
|---|---|---|
| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | |

| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **03/04/2024** | முதல் | **07/04/2024** |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | **027/ 2024** | வெளியீட்டு நாள் : | **02/04/2024** | | |

**சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை (28.03.2024 முதல் 01.04.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –07-04-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/03 | 29/03 | 30/03 | 31/03 | 01/04 | தேதி | நாள்-1 0304 | நாள்-2 04/04 | நாள்-3 05/04 | நாள்-4 06/04 | நாள்-5 07/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 39 | 38 | 38 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 39 | 38 | 39 | 39 |
| 27 | 27 | 25 | 25 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 27 | 27 | 27 |
| 4 | 4 | 1 | 2 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 0 | 3 | 5 | 3 |
| 76 | 76 | 68 | 63 | 65 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 70 | 70 | 70 | 70 |
| 37 | 36 | 30 | 35 | 42 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 6 | 7 | 12 | 5 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 16 | 14 | 14 | 16 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் மேற்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | **தெற்கு** |

**குறுஞ்செய்தி :**

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 14 முதல் 16 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**கால்நடை வளர்ப்பு :**

3 ஏப்ரல் முதல் 7 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது 2- 3° செல்சியஸ் செல்சியஸ் அதிகரித்து காணப்படும். 37° செல்சியஸ் முதல் 39° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில்

அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு (03.04.2024 to 07.04.2024) அதிகபட்ச வெப்பநிலை அதிகரித்து காணப்படும். இதன் காரணமாக சில இடங்களில் வெப்பஅலை வீசக்கூடும். எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 14 முதல் 16 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வாழை, மிளகாய், கால்நடை**

**வாழை:**

வாழை பயிரில் தற்போது பியூசேரியம் வாடல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வாழையில் முதலில், அடிப்புற இலைகளில் குறிப்பாக இலை ஓரங்களில், மஞ்சள் நிறமாகி வாடிக் காய்ந்து காணப்படும். தாக்குதல் அதிகரிக்கும் போது, மரத்தின் உச்சி இலைகள் விறைப்பாக மாறும். அடி இலைகள், இலைக்காம்புடன் ஒடிந்து தண்டைச் சுற்றி தொங்கும்.

இதனை தவிர்க்க பயிர் சுழற்சி முறையை பின்பற்ற வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு வாழைக் கன்றிற்கு 2கிலோ தொழுஉரம் + 40கிராம் டிரைக்கோடெர்மா விரிடி + 40கிராம் சூடோமோனஸ் + 200கிராம் வேப்பம் பிண்ணாக்கு போன்றவைகளை நன்கு கலந்து வாழை மரத்தின் தூர்பகுதியில் இருந்து ½ அடி தூரம் தள்ளி வைக்க வேண்டும்.

**மிளகாய்:**

காய்கறிப் பயிர்களில் வேர் முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. செடிகளுக்கு போதிய அளவு நீர் மற்றும் உரம் இட்டிருந்தாலும் பகல் நேரங்களில் வாடிக் காணப்படும். வேர் பகுதிகளில் வேர் முடிச்சுகள் காணப்படும்.

இதனை கட்டுப்படுத்த எக்டருக்கு 400 கிலோ வேப்பம் பிண்ணாக்கு இடலாம் மற்றும் கேந்தி பூப்பயிரை ஊடுபயிராக பயிர் செய்யலாம்.

மேலும் ஒரு எக்டருக்கு 2½ கிலோ பர்புரியோசிலியம் லில்லாசினம் என்ற உயிரினக் கலவையை 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து நீர் தெளித்து நிழலில் வைத்து 15 நாட்களுக்கு பிறகு காலை, மாலை நேரங்களில் வயலில் இடவேண்டும்.

**கால்நடை:**

இருப்பதால் அத்தியாவசிய அமினோ அமிலங்கள் மற்றும் தாது உப்புகள் போன்ற நுண்ணூட்டச் சத்துக்களின் அளவை அதிகரித்துக் கொடுக்க வேண்டும்.

மேலும், கோடையில் முட்டை ஓடுகள் மிகவும் மெலிந்து இருக்கும். இதைத் தவிர்க்க அதிக அளவு கிளிஞ்சலைத் தட்டுகளில் வைத்து முட்டைக் கோழிகளுக்கு எப்போதும் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

வழக்கத்தை விட கோடையில் தண்ணீர்த் தொட்டிகளின் எண்ணிக்கையை 20 முதல் 30 சதவிகிதம் அதிகரிப்பது நல்லது. அதனால் எல்லாக் கோழிகளும் தேவையான பொழுது ஒரே சமயத்தில் நீரைப் பருக வாய்ப்பு ஏற்படுகின்றது.

தண்ணீர் விரைவில் சூடாவதை தடுக்கப் பனிக்கட்டிகளைப் போட்டு நீரை, குளிர்விக்கலாம். கோடையில் கோழிகளுக்கு ஏற்படும் அயர்ச்சியைத் தடுக்க தண்ணீரில் தாதுக்களை சிறிது கூடுதலாக சேர்த்துக் கொடுக்க வேண்டும்.